1972 மார்ச் 18]

பயிற்சிபெற்ற பிறகு பணியில் அமர்த்த அரசு பொறுப்பேற்று வேலை தருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய அகதிகளுக்கு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு உதவி செய்யும் வகையில் விசைத்தறி ஆலைகள், குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்தில் அமைக்க இருப்பதாக அறிகிறேன். அது எந்தப் பகுதியில் என்று அறியலாமா? அதோடு, பொதுவாக கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் போளூர், வடபாதிமங்கலம், மாம்பட்டு போன்ற இடங்களில் ஆரம்பிக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இடங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது இந்த அகதிகளுக்காக 94 இலட்சம் ரூபாய் செலவிடப்பட இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இதிலே எவ்வளவு பவர் லூம்ஸ் அடங்கும் என்று அறிவிப்பார்களா? அதே நேரத்தில் வட மாநிலங்களில் நிறைய இருக்கிறது, தென் மாநிலங்களில் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, யார் வேண்டுமானாலும் இப்படிப்பட்ட பவர் லூம்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டால் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 750 பவர்லூம்ஸ், 95 இலட்சம் ரூபாய்க்கு. மாஸ்டர் வீவர்ஸ் தவிர வேறு எல்லோருக்கும் கொடுக்கலாம்.

Salt manufacturers in Tuticorin

* 558. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have given some assurance to Salt Manufacturers of Tuticorin about 28th October, 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 27—10—1971 ஆம் தேதி அன்று அரசு வெளியிட்ட அரசுக் குறிப்பொன்றின் நகல் * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, உப்பு உற்பத்தியை அரசு ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உப்பு உற்பத்தி பாதுகாக்கப்படுவதற்கு என்ன அஷ்யூரென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய கேள்வி.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, உப்பு எடுக்கும் தொழிலாளர்களுக்கு ஏதாவது குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் இருக்கிறதா? அல்லது முதலாளிகள் கொடுப்பதுதானா? இனி மேலாவது குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரப் படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உப்பு உற்பத்தி தொழில் இலாகா. தொழிலாளர்கள் மினிமம் வேஜஸ் தொழிலாளர் நல இலாகா.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்படும் பெரிய தொழிற்சாலையினால் உப்பு உற்பத்தித் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களா? எந்த அளவில் பாதிக்கப்படுவார்கள்? அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துறைமுகத்திற்குப் பக்கத்தில் உள்ள நிலங்கள்தான் இந்தப் பிரச்னைக்கு உரியவையாக இருக்கின்றன. தொழிற்சாலை துறைமுகத்திற்குப் பக்கத்தில் உருவானால் வெளிநாடுகளுக்கு அனுப்ப பயனுள்ள முறையில் அமையும் என்ற அடிப்படையில் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலங்களை எடுக்க வேண்டுமென்று அரசால் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அதை எடுப்பதால் உப்பு உற்பத்திக்குப் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முறையில், மாற்று இடம் பார்க்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட இடத்திலே வேறு தொழில்களுக்கு அவசியம் வந்தாலொழிய இந்த உப்பு உற்பத்தியைத் தடுக்கக்கூடாது என்ற முறையில் நம்முடைய அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

* 141 -ஆம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 மார்ச் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கனவே, இந்தத் தொழிலாளர்கள் இரண்டு பகுதிகளாக, லைசென்ஸ் உள்ளவர்கள், லைசென்ஸ் இல்லாதவர்கள் என்ற முறையில் பாகுபாடு ஏற்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு மனுச் செய்ததன்மேல் ஏற்றுமதி வசதியெல்லாம் கொடுக்கப்பட்டது. அது தொடர்ந்து இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. அதிலே பாதகம் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 4,000 ஏக்கர்கள் கையகப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன வழிவகை செய்திருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கென்று ஒரு நிபுணர் அமைக்கப்பட்டு, அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அரசாங்கத்திலே. நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை ஓரங்களில் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் புதிதாக உப்பளத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் அவர்கள் கூறுவது அந்த இடத்திலே பல ஆண்டுகளாகத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உடனடியாக வெளியேற்றினால் பாதகம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அந்த உறுதிமொழியைத் தான் கொடுத்திருக்கிறது, உடனடியாக வெளியேற்ற மாட்டோம், இன்றியமையாத வகையில், அதே இடத்தில் துறைமுகம் ஏற்பட்டாலொழிய வெளியேற்ற மாட்டோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறது.

Dams

* 559. Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government to restore breached anicut at South Pennar near Thorapally Agraharam in Hosur Taluk of Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?